# அருங்கொடைப்பாடல்கள்

1

ஆண்டிடும் தலைவா வணக்கம்
எங்கள் ஆலய இறைவா வணக்கம்

1. உந்தன் அன்பு எம்மைக் கொள்ளை கொள்ளும் - இன்று
   உன்னை எங்கள் வாழ்வு என்று உள்ளந்தனில் ஏந்துவோம்

2. நாளும் உந்தன் அருள் ஜோதி கொண்டு இந்த மண்ணில்
   என்றும் உந்தன் பெயரை ஏற்று நாங்கள் தொழுவோம்

3. உந்தன் சொந்தம் நாங்கள் எல்லாம் என்று
   எங்கள் உள்ளந்தனில் அன்பு கொண்டு நெஞ்சம் ஒன்றிவருவோம்
   வேலைதன்னில் முழு வேகம் கொள்வோம் - உந்தன்
   ஆணை காக்கும் சேதி என்றே ஆற்றலோடு வாழுவோம்

2

ஆற்றலோடு தூய ஆவி எழுந்து வந்தார்
போற்றி புகழ்ந்து பாடி பரவும் வரமும் தந்தார்
இறைவன் எந்தன் தந்தை என்றே இயம்ப செய்தார்
மறைவு வழியில் மாட்சி கூறி மகிழச் செய்தார்

1. பாவம் என்ன என்று காட்டி வருந்தச் செய்தார்
   தேவதேவ அருளில் என்றும் பொருந்த செய்தார்

2. அச்சம் நெஞ்சில் போக்கி அன்பில் மூழ்கச்செய்தார்
   இச்சை அடக்கி இழிந்த பாவம் நீங்க செய்தார்

3. உச்சி வானில் உயர்ந்த வாழ்வை உணரச் செய்தார்
   தச்சன் வளர்த்த இயேசு பெருமை தெரிய செய்தார்

3

ஆவியைத் தாரும் இயேசுவே - தூய
ஆவியைத் தாரும் இயேசுவே

1. புதுப்படைப்பாய் நான் மாற
   புதுமலரெனவே வாழ

2. எந்தன் தாகத்தை தீர்க்க
   இறைவா உன்னருள் சுரக்க

3. பாவ தளைகளை அறுக்க
   வாழும் வழிகளில் நிலைக்க

4

ஆவியே தூய ஆவியே
உன்னை தேடியே வந்தோம்
ஆவியே தூய ஆவியே
துணை நாடியே வந்தோம்

1. ஆறுதல் அளிப்பவர் நீரே எம்மில்
   ஆனந்தம் விளைவித்திடுவீரே
   அன்பே உனையே நம்பி

2. அறிவினைக் கொடுப்பவர் நீரே
   எங்கள் அமைதியை பெருக்கிடுவீரே
   அருளே உனக்காய் ஏங்கி

3. தெளிவினை விதைப்பவர் நீரே
   மன திடந்தனை மிகுந்திடுவீரே
   வாழ்வே உனையே வணங்கி

4. வரந்தனில் நனைப்பவர் நீரே
   எம்மில் வட்டங்கள் நீக்கிடுவீரே
   வந்தோம் அன்பில் பணிந்து

5. வீரங்கள் விளைப்பவர் நீரே
புது வேதங்கள் ஓதிடுவீரே
வாழ்வில் முதலே தொழுது

5

ஆவியே வாரும் -2
அடியவர் உள்ளத்தில் அமர்ந்திட வாரும்
ஆவியே வாரும் -2
அருங்கொடை வழங்கிட விரைவினில் வாரும்

1. மன்னிக்க வாரும் -2
மனுமக்கள் பாவம் மன்னிக்க வாரும்
மன்னிக்க வாரும்
ஒருவர் ஒருவரை மன்னிக்க வாரும்

2. ஒன்றிக்க வாரும் -2
உம்முடன் எம்மை ஒன்றிக்க வாரும்
ஒன்றிக்க வாரும் -2
எம்முடன் எம்மை ஒன்றிக்க வாரும்
விடுவிக்க வாரும் - 2
பாவத்தினின்று விடுவிக்க வாரும்
விடுவிக்க வாரும் -2
நோயினின்று விடுவிக்க வாரும்

3. மகிழ்விக்க வாரும் -2
மகிழ்ச்சியற்றோரை மகிழ்விக்க வாரும்
மகிழ்விக்க வாரும் -2
ஒருவர் ஒருவரை மகிழ்விக்க வாரும்

## 6

அன்பினைக் காட்டுங்கள்
அனைவர்க்கும் அன்பினைக் காட்டுங்கள்
எந்தன் ஆணையிது
தேவ அன்பினைக் காட்டுங்கள்

1. மகிழச்சி நிரம்பிடவே
   உளத்தில் அன்பினைக் காட்டுங்கள்

2. புதிய ஆணையிடு
   போற்றி அன்பினைக் காட்டுங்கள்

## 7

அன்பு மயம் ஆ... ஆ... ஆ... - 3
அன்பு மயம் இறை அன்பு மயம்
எல்லாம் அன்பு மயம் -3

1. மண்ணிலே நன்மை பிறந்திடச் செய்தது அன்பே இறையன்பே
   அன்புரு அன்னை தந்தையும் தந்தது
   உண்டிடும் உணவை தினமும் அருள்வது
   நண்பர்கள் சோதரர் உறவினை தகுவது

2. பணியினை செய்திட நம்மையே அழைத்தது
   பலியென நமது வாழ்வினை கேட்டது
   துணிவுடன் அவருடன் நடந்திட செய்வது
   தொடர்ந்தே பயணம் செய்திட அருள்வது

3. அன்பினை நமது நெஞ்சிலே வைத்தது
   நன்மையை செய்யும் ஆற்றலை தந்தது
   உண்மையும் வாழ்வையும் மலர்ந்திட செய்வது
   மண்ணில் நீதியை நேர்மையை விதைப்பது

8.

இறைவனின் ஆவி நிழலிடவே
இகமதில் அவர் புகழ் படர்ந்திடவே
என்னை அழைத்தார் அன்பில் பணித்தார்
அவர் பணியினை தொடர்ந்திடவே

1. வறியவர் செழிப்பினில் வாழ்ந்திடவும்
   அடிமைகள் விடுதலை அடைந்திடவும்
   ஆண்டவர் அரசில் துயரில்லை - என
   வான் அதிர பறை சாற்றிடவும் - என்னை

2. குருடரும் ஒளியுடன் நடந்திடவும்
   குவலயம் நீதியில் திளைத்திடவும்
   அருள்நிறை காலம் அவணியிலே
   வருவதை வாழ்வினில் காட்டிடவும் -என்னை

9.

அஞ்சலி கீதாஞ்சலி ஆண்டவர் இயேசுவுக்கு
அஞ்சலி புஷ்பாஞ்சலி தீபாஞ்சலி தூபாஞ்சலி
இறையஞ்சலி -2

1. ஆதியிலே வார்த்தை இருந்தார்.. அஞ்சலி கீதாஞ்சலி
   அந்த வார்த்தை கடவுளோடிருந்தார் .. அஞ்சலி புஷ்பாஞ்சலி

2. ஆதியிலே கடவுளோடு இருந்தார்.. அஞ்சலி கீதாஞ்சலி
   அந்த வார்தை கடவுளாயிருந்தார் .. அஞ்சலி புஷ்பாஞ்சலி

3. அவராலே அனைத்தும் ஆயின .. அஞ்சலி கீதாஞ்சலி
   ஏதும் அவரின்றி உண்டாகவில்லை .. அஞ்சலி புஷ்பாஞ்சலி

10

அறிவினை வளர்த்திடும் திருப்பெயரால்
அறநெறி காட்டிடும்
இயேசு இயேசு கிறிஸ்துவே -2
ஆறுதல் அளித்திடும் திருபெயரால்
மாறுதல் இல்லாத் திருப்பெயரால் - இயேசு....

1. அன்பினை வளர்த்திடும் திருபெயரால்
அஞ்சா மனம் தரும் திருபெயரால்
நாவினில் இனித்திடும் திருபெயரால்
பாவியை மீட்டிடும் திருபெயரால்

2. நீதியை வழங்கிடும் திருபெயரால்
தீதில்லா வழிதரும் திருபெயரால்
கனிதனை காட்டிடும் திருபெயரால்
முடிவில்லா பலன் தரும் திருபெயரால்

11

தேவனின் திருமகனே தேடும் ஆயனே
என் பிழை பொறுத்தருள்வாய்

1. உன்மொழி மறந்து என் வழி நடந்தோம்
உயிர் தரும் உண்மைகள் உதறிச் சென்றோமே -2
ஓய்வின்றி அலைத்தோமே

2. அன்பினை மறந்து அகந்தையில் நின்றோம்
அழிந்திடும் சிலைக்கே அடிமை செய்தோமே -2
ஆறுதல் இழந்தோமே

3. தன்னலம் மிகவே தலைகணம் கொண்டோம்
தந்தை உன் அணைப்பை தகர்த்தெறிந்தோமே -2
தனிமையில் உழன்றோமே

4. அண்ணலே உந்தன் அழைப்பினை மறந்தோம்
ஆயிரம் குரல்களை தொடர்ந்தலைந்தோமே
ஆயனை பிரிந்தோமே

12

என் வாழ்வில் இயேசுவே எந்நாளும் இங்கே
எல்லாமும் நீயாக வேண்டும் - எந்தன்
எல்லாமும் நீயாக வேண்டும்
சோகங்கள் ஆறாமல் நான் வாடும்போது
தாயாக நீ மாற வேண்டும் - அன்புத்
தாயாக நீ மாற வேண்டும்

1. பாரங்கள் தாங்காமல் சாய்கின்ற போது
பாதங்கள் நீயாக வேண்டும் - எந்தன்
பாதங்கள் நீயாக வேண்டும்
பாவங்கள் கடலாகி நான் மூழ்கும் போது
ஓடங்கள் நீயாக வேண்டும் - வரும்
ஓடங்கள் நீயாக வேண்டும்

2. பேராட்டம் சூழ்ந்தென்னை தீவாக்கும் போது
பாலங்கள் நீயாக வேண்டும் - இணை
பாலங்கள் நீயாக வேண்டும்
தீராத ஆர்வத்தில் நான் தேடி பயிலும்
பாடங்கள் நீயாக வேண்டும் - மறைப்
பாடங்கள் நீயாக வேண்டும்

13

என் விழியே இயேசுவை நீ பாரு
என் நாவே இயேசுவை நீ பாடு - 2

1. என் சிரசே இயேசுவை நீ வணங்கு -2
   என் நெஞ்சே இயேசுவிடம் உனை வழங்கு
   இயேசிடம் உனை வழங்கு

2. என் கரமே இயேசுவின் மொழி எழுது -2
   என் காதே இயேசுவின் மொழி கேளு
   இயேசுவின் மொழி கேளு

3. என் காலே இயேசுவின் வழி செல்லு -2
   என் உயிரே இயேசுவின் பதம் நாடு
   இயேசுவின் பதம் நாடு

14

என் ஆவியும் தூய ஆவியும்
என்னுள்ளே இணைந்துவிட்டால்
ஆனந்தம் ஆனந்தமே -2

1. ஆனந்தம் என்று சொல்வதா - அதை
   அருட்பெருக்கு என்று உரைப்பதா -2
   இன்ப வனம் என்று கூறவா - அதன்
   இறையாற்றல் என்றழைப்பதா -2
   பேரானந்தம் பரமானந்தம்
   இறையானந்தம் நிறையானந்தம் - 2

2. தீ நாக்கு தூய ஆவியா - அதை
   தீப்பிழம்பு எந்தன் ஆவியா - 2
   தீமைகளை சுட்டெரிக்குமே - அதன்
   தீச்சுடரில் மலர்ச்சி தோன்றுமே - 2
   பேரானந்தம் பரமானந்தம்
   இறையானந்தம் நிறையானந்தம் - 2

15

இயேசு இயேசு இயேசுவே என் வாழ்வை மாற்றுமே
இயேசு இயேசு இயேசுவே உம் ஆவியைத் தருவீர்
இயேசு இயேசு இயேசுவே என் நோய்கள் போக்குவீர்
இயேசு இயேசு இயேசுவே உம் ஆவியைத் தருவீர்

இயேசு இயேசு இயேசுவே உம் அமைதியைத் தருவீர்
இயேசு இயேசு இயேசுவே உம் ஆவியைத் தருவீர்
இயேசு இயேசு இயேசுவே என் மணப்புண் ஆற்றுவீர்
இயேசு இயேசு இயேசுவே உம் ஆவியைத் தருவீர்

16

இயேசு சொல்கிறார் - எங்கள்
இயேசு சொல்கிறார்
தந்தை இயேசு சொல்கிறார்
இறைவன் இயேசு சொல்கிறார்

1. தேடுங்கள் அகப்படும் - நீங்கள்
தேடுங்கள் அகப்படும் - நம்பி
தேடுங்கள் அகப்படும் - இன்று
தேடுங்கள் அகப்படும் - என்று .... என்று இயேசு ...

2. தட்டுங்கள் திறந்திடும் - நீங்கள்
தேடுங்கள் அகப்படும் - நம்பி
தேடுங்கள் அகப்படும் - இன்று
தேடுங்கள் அகப்படும் - என்று .... என்று இயேசு ...

3. கேளுங்கள் கிடைத்திடும் - நீங்கள்
கேளுங்கள் கிடைத்திடும் - நம்பி
கேளுங்கள் கிடைத்திடும் - இன்று
கேளுங்கள் கிடைத்திடும் - என்று.... என்று இயேசு ...

17

இயேசுவால் முடியாதது இல்லை
இனிது பேசுவார் நடந்திடும் உண்மை
வருந்தினால தேற்றுவார் சொல்லால்
இயேசு வருந்தினால பொறுப்பார் எல்லாம்

1. குருடருக்கு உதவுவார் ஒளியாய் -2
   இயேசு திருடனை வழியாய்

2. அடிமையின் தலைகளை அறுப்பார்
   இயேசு படித்தவர் செறுக்கினை வெறுப்பார்

3. இறந்தவர் எழுப்புவர்
   இயேசு துறந்தவர் நிறுத்துவார் தன்பால்

18

இயேசுவின் இனிய நாமம் மறந்தால் இறந்து போய்விடுவேன்
நான் இறந்து போய்விடுவேன்

1. நாதனின் நாமம் உரைக்காதிருந்தால் நாவு அழிந்திடுமே -2
   தேவா உனது பாதம் மறந்தால் கால்கள் தளர்ந்திடுமே - என்

2. கரங்கள் உம்மொழி எழுதாதிருந்தால் தாழ்ந்து போய்விடுமே -2
   கண்கள் திருமுகம் காணாதிருந்தால் பார்வை இருண்டிடுமே -2

3. சிந்தனை சொல் செயல் இயேசுவே என்றால்
   விண்ணகம் இதுவன்றோ -2
   மண்ணக வாழ்வில் விண்ணகம் பெறுவேன்
   விருந்தும் அதுவன்றோ - என்

19

இயேசுவுக்காய் போர்புரிய எழுந்து நாமே செல்வோம்
எதிர்த்து வரும் எதிரிகளை அன்பினாலே வெல்வோம்

1. ஆவியின் அருங்கொடையை அணிந்து நாமே செல்வோம்
அலகையின் சூழ்ச்சிகளை ஆவியாலே வெல்வோம்

2. இயேசுவின் இரத்தத்திலே இந்த யுத்தம் செய்வோம்
இறைவனின் வார்த்தைகளை போர்வாளாய் கொள்வோம்

3. அனைவருமே அணிவகுத்து செபத்துடனே நிற்போம்
ஆவியின் ஆற்றலாலே எங்கும் வெற்றி கொள்வோம்

20

இறைவனின் அரசையும்
ஏற்புடை வாழ்வையும்
குறையற தேடுங்கள்
முதலிலே நாடுங்கள்

1. உணவினால் மட்டும் வாழ்வதோ
உடையினால் மட்டும் அழகதோ

2. உண்டிடும் உன்னத வார்த்தையில்
கண்டிடும் உலகம் வாழ்வினில்

3. பருகிடும் தேவ வார்த்தையில்
உருகிடும் உள்ளம் உலகினில்

21

இறைவனின் ஆவி எழுகின்றார்
நம் இதயத்தில் வந்து நிறைகின்றார்
இயேசுவின் சீடர் என்பதனால்- நாம்
இயேசுவின் சீடர் என்பதனால்

இயேசுவை மகிமை படுத்திடவே - நாம்
இயேசுவை மகிமை படுத்திடவே

உண்மையின் சான்று பகர்ந்திடவே - நாம்
உண்மையின் சான்று பகர்ந்திடவே

இறைவனின் ஞானம் அடைந்திடவே - நாம்
இறைவனின் ஞானம் அடைந்திடவே

வருவதை நெஞ்சில் உணர்ந்திடவே - நாம்
வருவதை நெஞ்சில் உணர்ந்திடவே

நெஞ்சில் உறுதி கொண்டிடவே - நாம்
நெஞ்சில் உறுதி கொண்டிடவே

மனத்தில் பயத்தை விலக்கிடவே - நாம்
மனத்தில் பயத்தை விலக்கிடவே

உரிமை வேண்டுதல் பொழிந்திடவே -நாம்
உரிமை வேண்டுதல் பொழிந்திடவே

22

இது இறைவன் தந்த ஆணை - புது
வழியை காணும் வேளை
அன்பில் என்றும் நிலை கொள்ள வேண்டும் - நாம்
அன்பில் என்றும் நிலை கொள்ள வேண்டும்

1. பொறுமை பரிவு கொள்ளும் அன்பு
புதுமை தினமும் புரியும் அன்பு
மேன்மை தினமும் புரியும அன்பு - நமை
மேன்மை வாழ்வில் தேற்றிடும் அன்பு ( அன்பில்....)

2. ஒளியை இருளில் காட்டும் அன்பு
பழியை மனதில் போக்கும் அன்பு
முடிவில்லாது வளர்ந்திடும் அன்பு - இங்கு
புதிய பூமி படைத்திடும் அன்பு

3. தளரா உறுதி கொள்ளும் அன்பு
தனதாய் எதுவும் கொள்ளா அன்பு
உண்மை என்றும் நாடிடும் - அந்த
இறைவனுக்கே இலக்கணமாம் அன்பு

23

கைகளை கொட்டி
குரலினை எழுப்பி
கர்த்தரை பாடாயோ
பாடிடுவேன் -2 கர்த்தரை பாடிடுவேன்

1. இரக்கமும் பெரிது இசையும் பெரிது
இறைவனை பாடாயோ
2. துறந்திடும் இறைவன் புகழும் பெற்று
புண்ணியர் பாடாயோ
3. பாடிடு மகிழ்ந்து அணைத்திடு துணிந்து
அன்பினை பாடாயோ

24

கட்டவிழ்த்து போகவிடும் இயேசுவே
பாவ கட்டுகளை அவிழ்த்து விடும் இயேசுவே
பாவி என்னை ஏற்றுக்கொள்ளும் இயேசுவே
எங்கள் வாழ்வை என்றும் மாற்றிவிடும் இயேசுவே

1. மனநோய்கள் போக்கிவிடும் இயேசுவே எங்கள்...
2. உடல்நோயை தீர்த்து விடும் இயேசுவே எங்கள்...
3. பேயின் சக்தி என்றும் அழித்து இயேசுவே ....

25

கவலையே எனக்கில்லை - எந்த
கவலையும் எனக்கில்லை
கடவுள் எந்நாளும் என்னுள் நடக்கும் வழிதுணையும்

1. தடையா பயமல்ல எனக்கு வழியாய் திகழ்கின்றார் ( கவலையே)
   கடவுள் என் ஆயன் என்னுள் நடக்கும் வழித்துணைவன்
2. பசியா பயமில்லை எனக்கு உணவாய் வருகின்றார்
   கடவுள் என் ஆயன் என்னுள் நடக்கும் வழித்துணைவன்
3. பிணியா பயமில்லை தோளில் அணைத்தே சுமக்கின்றார்
   கடவுள் என் ஆயன் என்னுள் நடக்கும் வழித்துணைவன்

26

மகிழ்வோம் - 3
மகிமைக்கு ஆண்டவர் அழைக்கின்றார் -2
பாடுவோம் இறை இயேசுவை
தேடும் இறை வார்த்தையை

1. பாடுவோம் நற்செய்தியை
   நாடுவோம் நல்வாழ்வினை - 2

27

மனமே ஆண்டவரை போற்று
தினமும் ஆண்டவரை போற்று

1. சோதனை உன்னை தொடர்கையிலே ஆண்டவரை போற்று
   வேதனையில் நீ விழுகையிலே ஆண்டவரை போற்று

2. கவலையில் நீயும் அழுகையிலே ஆண்டவரை போற்று
   கண்ணீரிலே கரைகையிலே ஆண்டவரை போற்று

3. உலகம் உன்னை பகைக்கையிலே ஆண்டவரை போற்று
   ஊரார் உன்னை வெறுக்கையிலே ஆண்டவரை போற்று

28

முடிவில்லாத வாழ்வைத் தேடி வருகிறேன் - இறைவா
உன் முன்னிலையில் மண்டியிட்டுக் கிடக்கிறேன் - இயேசையா

1. நானே உயிர்தரும் ஊற்று - என்ற
   வார்த்தையின் பொருள் என்னவோ
   உன் ஊற்றில் பருகும் எனக்கென்றும்
   இறப்பில்லையோ, இருள் இல்லையோ
   தாகம் இல்லையோ

2. நானே உயிர் தரும் உணவு - என்ற
   வார்த்தையின் பொருள் என்னவோ
   உம் உடலை உண்ணும் எனக்கென்றும்
   பசியில்லையோ, துயர் இல்லையோ
   இறப்பில்லையோ

29

நல்லருள் புரிந்திடும் எம் இறைவா
எந்தன் நாவினில் உன் பெயர் நடம்புரியும்
தலைவனே உனது சந்நிதியில்
என்றும் உன் புகழ் இசைத்திட வரமருளும்

1. உடலெனும் ஆலயம் படைத்து வைத்தாய் - அதில்
உயிரெனும் தீபம் ஏற்றி வைத்தாய்
மனிதன் என்னும் மகுடம் தந்தே நீ
மாண்புடன் என்னை அழகு செய்தாய்

30

நலம் அருள் என்றே கரம் குவித்தேன் - எந்தன்
தலைவா நின்பதம் சரண் புகுந்தேன் - 2
என் மனம் விடுதலை அடைந்திடவே -2
இன்று உன் வரம் தேடி உனை அடைந்தேன்

1. நோய்தனில் வீழ்ந்தே நலம் இழந்தேன் - மனம்
ஓய்வினை அறியா நிலை அடைந்தேன் -2
தூய்மையன் உருவே உனை நினைந்தேன் -2
வரும் தீமைகள் விலகவே உனை தொழுதேன்

2. வஞ்சமும் பகைமையும் நிறைந்ததய்யா - எந்தன்
நெஞ்சமும் நிம்மதி மறந்ததய்யா - 2
தஞ்சம் கேட்கின்றேன் வழங்கிடுவாய் - 2
நான் அஞ்சும் நிலை கண்டு இரங்கிடுவாய்

31

நல்லதொரு செய்தினை நான் உனக்கு சொல்லுகிறேன்
இயேசு உன்னை அன்பு செய்கிறார்
நலமுடனே வாழ்வதற்கு காரணத்தை சொல்லுகிறேன்
இயேசு உன்னை அன்பு செய்கிறார்

1. நம்பிக்கையில் வாழ்வதற்கு காரணத்தை சொல்லுகிறேன்
இயேசு உன்னை அன்பு செய்கிறார்
வாழ்வை மாற்றிக் கொண்டதற்கு காரணத்தை சொல்லுகிறேன்
இயேசு உன்னை அன்பு செய்கிறார்

2. வாழ்வின் நிறைவை கண்டதற்கு காரணத்தை சொல்லுகிறேன்
இயேசு உன்னை அன்பு செய்கிறார்
நன்மை யாவும் செய்வதற்கு காரணத்தை சொல்லுகிறேன்
இயேசு உன்னை அன்பு செய்கிறார்

32

நான் நடப்பது நாதனே உன் வழியில்
நான் வாழ்வது தேவனே உன் ஒளியில்
நான் காண்கிற ஒளியோ உன்னிடத்தில்
நான் பெருகிற பலமோ உன் தடத்தில்

1. நான் பேசிட மொழியை ஊட்டுகிறாய்
நான் மாசற தீவினை ஓட்டுகிறாய்

2. நான் தேறிட தடைகள் நீக்குகிறாய்
நான் மாறிட இயேசுவே இருக்கின்றாய்

33

நன்றி - 2 இறைவா
நன்றி -2 தலைவா

1. வரங்கள் கோடி தந்தால்
வளங்கள் வாழ்வில் வந்ததால்
இதய அமைதி தந்ததால்
புதிய நலன்கள் வந்ததால்

2. அடியேன் செபத்தை கேட்டதால்
பரிவால் என்னை மீட்டதால்
உலகை படைத்து காப்பதால்
உறவை வளர்க்க பிறந்ததால்

3. சிலுவை மரணம் ஏற்றதால்
சிறுமை பேயை வென்றதால்
ஒளியாய் மீண்டும் உயிர்த்ததால்
அழியா வாழ்வை தந்ததால்

4. தேற்றும் ஆவி தந்ததால்
போற்றும் வலிமை தந்ததால்

34

ஒளியற்ற கண்களில் தீபங்கள் ஏற்றினாய்
மொழியற்ற நாவினில் காவியம் எழுதினாய்
உயிரற்ற உடலினில் உயிரளித்தாய்
துயருற்ற நெஞ்சினில் மகிழ்வளித்தாய் -2
நன்மையின் நாயகனே - இயேசுவே
அன்பினை வளர்த்திடுவாய் என்னில்
அன்பினை வளர்த்திடுவாய்

35

ஒன்று உள்ளது என்னிடம்
அதை உலகம் அளிக்காது
இந்த உலகம் அளிக்காது -2
நன்று உள்ளது என்னிடம்
அதை நாதன் அளித்தாரே
இயேசு நாதன் அளித்தாரே -2

1. ஒன்று உள்ளது என்னிடம்
என்னை பாட வைக்கிறது
மகிழ்ந்து ஆட வைக்கிறது - 2
நன்றே உள்ளது என்னிடம்
அதை சாந்தி என்பாரே
இயேசு சாந்தி என்பாரே -2

2. ஒன்று உள்ளது என்னிடம்
   அதை துன்பம் ஒழிக்காது
   ஒரு துயரம் அழிக்காது -2
   நன்று உள்ளது என்னிடம்
   அதனால் நன்மை வருகிறது
   இனிய தன்மை வருகிறது -2

36

புகழ்ந்திடு நெஞ்சமே
புகழ்ந்திடு இயேசுவை
புகழ்ந்திடு பொழுதெல்லாம்

1. புகழ்ந்திடு காலையிலே
2. புகழ்ந்திடு பகலினிலே
3. புகழ்ந்திடு மாலையிலே
4. புகழ்ந்திடு இரவினிலே

37

சிலுவையில் அறையுண்ட மெசியா - இறை
வல்லமையும் இறை ஞானமுமாய் உள்ளார் - இதை
உள்ளங்கள் உணர்ந்திடட்டும் - இந்த உலகமும்
உணர்ந்திடட்டும் - அல்லேலூயா

1. நெஞ்சினில் அமைதியை இழக்கின்றோம் - மன
   நிம்மதி இழந்தே தவிக்கின்றோம் -2
   நோவிலும் சாவிலும துடிக்கின்றோம் - எங்கள்
   தேவனே சிலுவையின் பொருள் சொல்லுவாய்
   இந்த சிலுவை உமது வல்லமையோ?
   இந்த சிலுவை உமது ஞானமோ? - அல்லேலூயா

2. உறவுகள் நிறைவு தருவதில்லை - உங்கள்
   உள்ளத்தில் அன்பு வளர்வதில்லை -2
   பிரிவுகள் பிளவுகள் பிணக்குகளே - எங்கள்
   வீட்டிலும் நாட்டிலும் வளர்வது ஏன்?
   இந்த சிலுவை உமது வல்லமையோ?
   இந்த சிலுவை உமது ஞானமோ? - அல்லேலூயா

3. குற்றம் இல்லாதோர் மாய்கின்றார் - உம்
   குழந்தைகள் பசியில் மாளகின்றார்
   நீதியை அழிப்போர் வாழ்கின்றார்
   பல நேரிய மனிதர் வீழ்கின்றார்
   இந்த சிலுவை உமது வல்லமையோ?
   இந்த சிலுவை உமது என்னமோ? - அல்லேலூயா

## 38

தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ
தனது பிள்ளை அவள் மறப்பாளோ?
தாய் மறந்தாலும் நான் மறவேனே
தயவுள்ள நம் கடவுள் தான் உரைத்தாரே

1. குன்றுகூட அசைந்து போகலாம்
   குகைகள் கூட பெயர்ந்து போகலாம்
   அன்பு கொண்ட எந்தன் நெஞ்சமே
   அசைவதில்லை பெயர்வதில்லையே

2. தீ நடுவே நீ நடந்தாலும்
   ஆழ்கடலைத் தான் கடந்தாலும்
   தீமை ஏதும் நிகழ்வதில்லையே
   தீதின்றியே காத்திடுவேன் நான்

39

திருநல் ஆவி வருகின்றார்
வருபவர் நெஞ்சில் நிறைகின்றார்
நல்லதோர் செய்தி நவில்ந்திடவே
எனை இங்கு நல்லதோர் செய்தி நவில்ந்திடவே

1. உடைந்த உள்ளத்தை குணப்படுத்த - எனை இங்கு
   உடைந்த உள்ளத்தை குணப்படுத்த

2. விடுதலை செய்தி விளம்பிடவே - அடிமைக்கு
   விடுதலை செய்தி விளம்பிடவே

3. பார்வை உண்டென பகர்ந்திடவே - குருடர்க்கு
   பார்வை உண்டென பகர்ந்திடவே

4. புதுநல் உறவை வழங்கிடவே - பாவிக்கு
   புதுநல் உறவை வழங்கிடவே

40

1. தொடும் என் கண்களையே
   உம்மை நான் காண வேண்டும் - இயேசுவே
   உம்மையே நான் காண வேண்டுமே

2. தொடும் என் காதுகளை
   உம் குரல் கேட்க வேண்டுமே - இயேசுவே
   உம் குரலை கேட்க வேண்டுமே

3. தொடும் என் உடலினையே
   நோய்கள் தீர வேண்டுமே - இயேசுவே
   உடல் நோய்கள் தீர வேண்டுமே

4. தொடும் என இதயத்தையே
உம் அன்பு ஊற வேண்டுமே - இயேசுவே
உம் அன்பு ஊற வேண்டுமே

41

உன் சொல்லில் என் பாதைக் ஒளியில்லையே
என் நோய்க்கு உன் சொல்லில் குணமில்லையோ

1. நீரோடு நீர் பேச மனுவானது சொல்லில்
சீரோடு தினம் கேட்டு உயிரானது - வெறும்
யாரோடு யார் பேசி

2. புயலோடு நீர் பேச தணிவானது - சொல்லை
கயல் கேட்டு அலைமீது உணவானது
நெஞ்சல் பயம் போக்க உனதன்றி வேறுள்ளதோ

3. நோயோடு நீர் பேச குணமானது - சொல்லை
பேய் கேட்டு பயந்தோடி புறம்போனது - உந்தன்
வாய்பேச யான் கேட்டு மனம் மாறினோம்

42

உந்தன் அரசு வருக
எம் உள்ளம் அமைதி பெறவே
உந்தன் அரசு வருக

1. நீதி உலகில் ஆளும்
எம் நெஞ்சில் வீரம் பாடும்
ஆதி பாவம் நீங்கும் - உம்
அரசு இங்கு வந்தால்

2. வாழ்வு இல்லை என்று
மனம் வாடும் மாந்தர்கெல்லாம்

வாழ்வின் வழியாய் அமைய
தினம் வரும் உந்தன் அரசு

3. பூசல் போர்கள் ஓயும்
கடும் போட்டி குணங்கள் மாயும்
நேச கரங்கள் நீளும்
உன் நேர்மை அரசு வந்தால்

43

வந்தருளும் ஆண்டவரே
உடனே வந்தருளும்

1. வேண்டுகிறேன் தினமும் தொடர்ந்து வேண்டுகிறேன் - தினமும்
வந்தருளும் ஆண்டவரே உடனே வந்தருளும்

2. துவழுகிறேன் தினமும் தனியே துவளுகின்றேன் - தினமும்
வந்தருளும் ஆண்டவரே உடனே வந்தருளும்

3. அழுகின்றேன் தினமும் நொந்து அழுகின்றேன் - தினமும்
வந்தருளும் ஆண்டவரே உடனே வந்தருளும்

4. புலம்புகின்றேன் தினமும் அழுது புலம்புகின்றேன் - தினமும்
வந்தருளும் ஆண்டவரே உடனே வந்தருளும்

5. வருந்துகிறேன் தினமும் நொந்து வருந்துகின்றேன் - தினமும்
வந்தருளும் ஆண்டவரே உடனே வந்தருளும்

44

வந்தோம் தந்தாய் உள்ளம் ஒன்றி வாழ்ந்து சொல்ல வந்தோம் தந்தாய்
வந்தோம் தந்தாய் உள்ளம் ஒன்றி ஆசிகொள்ள வந்தோம் தந்தோம்
உந்தன் அன்பு உள்ளம் கொண்டு உலகில் நாங்கள் வாழவே - 2

தூய உள்ளம் கொண்டு என்றும் துணிந்து நாங்கள் வாழவே - 2
உறவு சொல்லும் உயர்வு எல்லாம் உணர்ந்து நாங்கள் வாழவே - 2
நீதி தேடும் நெஞ்சம் கொண்டு நிலைத்து நாங்கள் வாழவே - 2
நேர்மை குன்றா உறுதி கொண்டு நிமிர்ந்து நாங்கள் வாழவே - 2
தியாகம் என்னும் செஞ்சுடர் ஒளியில் தினமும் நாங்கள் வாழவே - 2

45

வாரும் ஆவியே துணைதாரும் ஆவியே
நீ தொட்டால் துளிர்த்த நெஞ்சம் கோடிகோடியே
கரம் பட்டதால் உயிர்த்த மனங்கள் பாடும் நன்றியே

1. பகைமை நிறைந்திடும் மனகுகையை தகர்க்கவே
   வருவாய் இறைவா நிறைவாய் அருள்வாய்
   பகைமை நிறைந்திடும் மனகுகையை தகர்க்கவே
   பிறர் அன்பு என்னும் பண்பில் நாங்கள் என்றும் வளரவே
   நீ இன்று அருளுவாய்

2. வெறுமை சூழ்ந்திடும் மனம் நிறைவை காணவே
   வருவாய் இறைவா நிறைவாய் அருள்வாய்
   வெறுமை சூழ்ந்திடும் மனம் நிறைவை காணவே
   வரும்வரங்கள் ஏழும் வழங்க வாரும் வானின் ஆவியே
   என கானம் பாடினோம்

3. வறுமை கோடுகள் இனி விரைவில் மறையவே
   வருவாய் இறைவா நிறைவாய் அருள்வாய்
   வறுமை கோடுகள இனி விரைவில் மறையவே
   இவன் பொருளும் அருளும் நிறைய வாரும் திருவின் ஆவியே
   இறை அருளின் ஆவியே

46

வாழிய மூவொரு இறைவா -2

தூய மூவொரு இறைவா இறைவா - வாழிய -2

இணைந்த மூவொரு இறைவா இறைவா - வாழிய - 2

படைக்கும் மூவொரு இறைவா இறைவா - வாழிய - 2

மீட்கும் மூவொரு இறைவா இறைவா - வாழிய - 2

அர்ச்சிக்கும் மூவொரு இறைவா இறைவா - வாழிய - 2

47

வாழ்வும் வழியும் நானென்றார் - இயேசு

வாய்மையும் வழியும் நானென்றார் - இயேசு

வாழ்வினறி இறந்திட பொருளுண்டோ

ஒளியின்றி கண்டிட நிறைவுண்டோ

வாய்மையும் இன்றி நெறியுண்டோ

வழியின்றி சென்றிட இடமுண்டோ

48

வெற்றி வேந்தராய் சாவை வென்று வாழ்வுதந்த தேவ மைந்தனே

நன்றி பொங்கவே நாமும் பாடி வாழ்த்து கூறி

போற்றி மகிழுவோம் அல்லேலூயா - 3

1. பாவ நோயினின்று நம்மை மீட்கவே
   பாரசிலுவை மரணம் ஏற்ற வேந்தனை
   எந்நாளும் பாடுவோம் அன்போடு போற்றுவோம்
   தூய தேவன் புகழைப் பாடுவோம்

2. புகழின் கீதம் வானம் அதிர பாடுவோம்
   புதிய வாழ்வில் இறைவனோடு சேருவோம்
   மண்ணோரின் தேவனை விண்ணோரின் வேந்தனை
   பண்ணசைத்து பாடி மகிழுவோம்